**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 152/2015</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **14.11.2025** |
| **பெயர்** | **கன்னிமா** |
| **க/பெ** | **சீனிவாசன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.27.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

27. 2010–ம் வருடம் என் தாயார் இறப்பிற்கு நான் திருப்பதியில் இருந்து என் தாயாரின் இறுதிச் சடங்கிற்கு வந்தபோது எனது சகோதரர்களின் அனுமதியுன் தான் சிறுது காலம் வழக்கு சொத்தில் தங்கி இருந்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என்னால் எவ்வளவு காலம் வழக்கு சொத்தில் இருந்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூற இயலவில்லை என்றால் திருமணம் ஆனதிலிருந்து வழக்கு சொத்தில் தான் உள்ளேன். என் தந்தையார் எனக்கு எந்தவிதமான உயில் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும் என் சகோதரருக்கு தான் எழுதி வைத்தார் அதனால் தான் எனது பிராதில் பத்தி 8 மற்றும் 9–ல் தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

28. அதனால் தான் காவல் நிலையத்தில் ஆவணங்கள் காணாமல் போனதாக பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 நான் காவல் நிலையத்தில் அளித்த புகார் பொய்யானது என்றும், அதனால் தான் அதன் பெயரில் காவல்நிலையத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அந்த புகார் முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் சேர்த்து என் தந்தை உயில் எழுதி வைத்ததாக அந்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுக்கப்பட்டதாக கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

29. வா.சா.ஆ 2–ல் என் பெயரில் உள்ள உயிலை என் சகோதரர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அது எனக்கு சகோதரரான 1–ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2–ல் குறிப்பிட்டுள்ள விவரம் பொய்யானவை என்றும் அந்த ஆவணம்

வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4–ல் காவல்நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது அதில் நான் ஆஜர் ஆனேன். அந்த புகாரின் நிலை குறித்து தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ 6–ல், 30.06.2015 தேதியிட்ட வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட புகார் தற்போது நிலுவையில் இல்லை என்றால் சரிதான்.

30. பிரதிவாதிகளின் அனுமதியின் பெயரில் வழக்கு சொத்தில் சிறுது காலம் தான் நான் தங்கி இருந்தேன் என்றும், வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் எந்த வித உரிமையும் இன்றி இத்தாவாவை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது முந்தைய சாட்சியத்தில் என் தந்தையின் சொத்து அவரின் வாரிசுகள் வந்தடையும் என்று குறிப்பிட்டு இருந்தபோது பிற வாரிசுகளை எதிரத்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. பக்கிரிசாமியின் இதர வாரிசுகள் மீது இந்த வழக்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்படப்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்குமூலம் எதுவும் எழ வில்லை என்றால் சரியல்ல.

31. 2013–ல் என் கணவர் பக்கிரிசாமியின் ஒரு வாரிசிடம் இருந்து வழக்கு சொத்தின் ஒரு பகுதி கிரையம் பெற்று இருந்த காரணத்தை தெரிந்து இருந்தும் அதை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்கூறிய சங்கதிகளின் அடிப்படையில் என் சகோதரர் காவல்நிலையத்தில் புகார் அளித்து அதன் பெயரில் விசாரணையும் நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்பதை நிருபிக்கவும் மற்றும் என் தந்தை என் பெயருக்கு எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

32. வழக்கு சொத்திற்கு அருகில் என் கணவரின் மற்றொரு வீடு உள்ளதால் அந்த விலாசத்தை தான் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது பிராதில் பத்தி 8 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றும் அதனால் தான் என் கணவரின் மீது நான் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.55.p.m.**